20.03.2025

IDOP.OP. No. 25/2017

ம.சா. 1 – ஜான் ஆப் ஆர்க்

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

என் கணவர் மனு எண். 14/2017 என்ற வழக்கை விவாகரத்து கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கின் சம்மன் வந்த பிறகு தான் சேர்ந்து வாழ கோரி நான் ஒரு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது என் கணவர் மற்றும் அவருடைய பெற்றோர் மற்றும் இதரர் மீது குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் சமூக நல அதிகாரியிடம் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் மனு எண். 25/2017 சொல்லப்படாத வேறு சில குற்றச்சாட்டுகளும் சேர்த்து சொல்லியிருந்தேன் என்றால் சரியல்ல. 05.03.2018ம் தேதி என் கணவரும் அவருடைய குடும்பத்தாரும் சமூக நல அதிகாரியிடம் விசாரணைக்கு ஆஜரான போது என் தகப்பனார் என் கணவரை தாக்கி மாடியில் இருந்து கீழே தள்ளிவிட முயற்சி செய்தார் என்றால் சரியல்ல. அதன் மீது புகாரினை செசன்ஸ் கோர்ட் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது என்றால் இல்லை. அவர் புகார் கொடுத்து விசாணைகரு என் தகப்பனார் ஆஜராகி செய்த தவறுக்கு வருத்தம் தெரிவித்து இனி மேல் செய்யமாட்டேன் என்று எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. சமூக நலத்துறையில் கொடுத்த புாகரின் அடிப்படையில் தற்போது வழக்கு லால்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். என் கணவர் அவருடைய பாஸ்போட், 7,200 US டாலர்ஸ், லேப்டாப், ஐ போன் ஆகியவற்றை நான் எடுத்து சென்றதாக புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அவற்றை நான் எடுத்து செல்லவில்லை என்று காவல் நிலையத்தில் சொன்னேன் என்றால் சரிதான். பாஸ்போட்டிற்கு டுப்ளிகேட் அப்ளை செய்தால் எங்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று புரத்தாக்குடி தபால் நிலையத்தில் சொல்லி வைத்தோமா என்றால் இல்லை. அவ்வாறு என் கணவருக்கு 10.03.2018 அன்று புது பாஸ்போட் தபால் நிலையத்திற்கு வந்தது

என்றும் அதை வாங்க சென்றபோது நானும் என் தகப்பனார் மற்றும் சகோதரி ஆகியோர் சென்று அதை பறித்துவிட்டதாக அது குறித்து என் கணவர் சமயபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அந்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு தற்போது என் மீதும் என் தகப்பனார், சகோதரி மற்றும் தபால் அலுவலர் ஆகியோர் மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. அவ்வாறு நான் பாஸ்போட்டை பிடிங்கி செல்லும்போது என் கணவர் விரட்டி பிடித்து பாஸ்போட்டை என்னிடம் பிடிங்கி கொண்டார் என்றால் சரியல்ல. அதை தொடர்ந்து நான் என் தகப்பனார், என் அக்கா ஆகியோர் சேர்ந்து என் கணவரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அவருடைய கல்வி சான்றிதழ்களை கிளித்து போட்டு வெளியே நின்று கொண்டிருந்து இரண்டு கார் கண்ணாடிகளை அடித்து உடைத்துவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் புகார் கொடுத்ததை ஒட்டி அதற்கு பதிலடியாக நான் என் கணவர் மீதும் அவருடைய சகோதரர் பாஸ்கர், ஜோசப், நண்பர்கள் சப்பானி, சேசு, ஆஸ்வால் ஆகியோர் மீது அவர்கள் என்னை தாக்கியதாக புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்தபுகாரின் மீது புலன் விசாரணை மேற்கொண்டு அது பொய்யான புகார் என்று போலிசார் முடித்து விட்டார்கள் என்றால் புகார் உண்மைதான் போலிசார் பொய்யான புகார் என்று சொல்லியுள்ளார்கள். நான் இடைக்கால ஜீவனாம்சம் கேட்டபோது நான் இந்த வேலையில் இல்லை என்றால் சரிதான். 02.01.2019 அன்று லியோனாட் என்ற பள்ளியில் ஆசிரியராக பணியில் சேர்ந்தேன் என்றால் சரிதான். எனக்கு தற்காலிக ஆசிரியர் என்ற அடிப்படையில் ரூபாய் 5,500 சம்பளம் வழங்கினார்கள். 29.01.2017 அன்று என் கணவர் வழக்கறிஞர் அறிவிப்பு சேர்ந்து வாழ கோருகிறார் என்றால் சரிதான். அதற்கு நான் சேரந்து வாழ வராமல் நான் 25.02.2017 அன்று பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். சாட்சி தானாக நான் வீட்டிற்கு சென்றதாகவும் கணவர் வீடு ஆட்கள் உள்ளே இருந்தும் பூட்டப்பட்டு இருந்ததாக சொல்கிறார். நான் அனுப்பிய மேற்சொன்ன பதில் அறிவிப்பு என் கணவருக்கு வெளிநாட்டில் ஒரு பெண்ணுடன் தொடர்பு இருந்தாக

சொல்லியிருந்தேன் என்று சொல்லியிருந்தேன் என்றாலும் தற்போது மனுவில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். அந்த பதில் அறிவிப்பை என் கணவர் வேலை செய்யும் அலுவலகத்திற்கு அனுப்பி அவர் அலுவலகத்தில் அவருக்கு அவப்பெயரை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சியம் இத்துடன் ஒத்தி வைக்கப்படுகிறது)**

**மறு விசாரணை :–** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.